மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : அங்கத்தினர் சொன்னது எனக்குத் தெரியாது. அங்கத்தினருக்குத் தெரிந்திருக்கலாம். அதிகப்படியான அளவிற்கு வேகமுள்ள மோட்டார்களை அதில் பயன்படுத்துவதால் தீ அணைப்பு வேலைகளில் நல்ல பலனைக் கொடுக்கும் என்று நிபுணர்கள் கூறுவார்களானால் அது கவனிக்கப்படும்.

வைகைக் கால்வாய்

முற்பகல் 9-30 *184 வின.—**திரு. கரு. சீமைச்சாமி** : மதிப்பிற்குரிய பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

வைகைக் கால்வாயை நவீனமாக்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்தத் திட்ட வேலைக்கு, மத்திய நீர் மின்சாரக் குழுவின் தொழில் நுட்ப ஒப்புதலும் திட்டக் குழுவிலிடமிருந்து நிர்வாக ஒப்புதலும் எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கரு. சீமைச்சாமி : ஸார், வைகைக் கால்வாய்த் திட்டம் பெரிய, பழைய திட்டம். சென்ற அமைச்சரவை இருக்கும்போது கூட இது மூன்றாவது திட்டத்தில் சேர்க்கப்படும் என்று சொன்னார்கள். இப்போது கூட பிளானிங் கமிஷன் அப்ரூவ் செய்து விட்டார்கள். ஹை பவர் கமிஷன் என்று ஒன்று இருக்கிறது, அது அப்ரூவ் செய்ய வேண்டுமென்று சொல்லுகிறார்கள். உணவு உற்பத்திப் பெருக்கத்திற்கு உபயோகமான ஒரு திட்டம். கிழக்கு இராமநாதபுரத்தையே செழிப்பு அடையச் செய்ய நல்ல திட்டம் இது. இது நான்காவது திட்டத்தில் சேர்த்து நிறைவேற்றப்படும் என்று அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மத்திய நீர்-மின்சாரக் குழுவினுடைய 24-4-1967-ம் தேதியிட்ட கடிதத்தில் ஆலோசனைக் குழு இதை ஒப்புக் கொண்டுவிட்டதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தக் கடிதத்திலே மேலும் சில விவரங்களைக் கேட்டிருக்கிறார்கள். நம்முடைய தலைமைப் பொறியாளர் அந்த விவரங்களை அளித்திருக்கிறார். வெகு விரைவில் அதற்கான பதில் வந்து சேருமென்றும், விரைவில் ஏற்றுக்கொள்ளப்படும் என்றும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. எஸ். கே. வடிவேலு : தலைவர் அவர்களே, தொட்டியம் தொகுதியைச் சேர்ந்த நாகை நல்லூர் வாய்க்கால் திட்டம் என்று ஒரு திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : கேள்வி, வைகைக் கால்வாய் திட்டத்தைப் பற்றியது. உறுப்பினர் கேட்பதைப்பற்றித் தனியாகக் கேள்வி கேட்டால் பதில் சொல்லப்படும்.

1967 ஜூலை 6]

திரு. கரு. சீமைச்சாமி : தலைவர் அவர்களே, பதிலை எதிர்பார்ப்ப தாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் அது நிறைவேற்றப்படும் என்று அமைச்சர் அவர்கள் உறுதிமொழி அளிப்பார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : திட்டம், நான்காவது திட்டத் திலே சேர்க்கப்படவேண்டிய ஒன்று ஆகும். இதற்காக மத்திய அரசாங்கத்திடமிருந்து தனியாகப் பணம் எதிர்பார்க்கவில்லை. நான்காவது திட்டத்திற்கு ஒதுக்கும் பணத்திலிருந்து செலவு செய்யப்படவேண்டும். இதற்கு மொத்தச் செலவு 3.95 கோடி ரூபாய் ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வேளாண்மைத் துறையில் ஏற்பட இருக்கிற பயனை எடுத்துப் பார்க்கிற நோக்தில், இந்தக் கால்வாய்த் திட்டத்தினால் புதிதாக 13,900 ஏக்கர்கள் பாசனத்தின்கீழ் வரும் என்பதையும், தற்போது பாசனம் பெறுகிற 95,882 ஏக்கர்கள் நிலத்திற்கு பாசனம் உறுதிப்படும் என்பதையும் கணக்கில் வைத்துப் பார்க்கும்போது, இதை விரைவிலே நிறை வேற்ற வேண்டுமென்ற அக்கறை மாண்புமிகு உறுப்பினர் அவர் களுக்கு இருப்பதுபோலவே இந்த அரசுக்கும் இருக்கிறது.

சென்னை—வேலூர் பஸ்

* 185 வினா.—**திரு. எஸ். ஜே. ராமசாமி :** மதிப்பிற்குரிய பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்வி களுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இந்த ஆண்டில் சென்னை—வேலூருக்கு வாரத்திற்கு மூன்று நாள் அரசாங்கம் பஸ் விடுவதை மாற்றி தினந்தோறும் பஸ் விட அரசாங்கத்திற்கு திட்டம் ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) உடனடியாக இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, உடனடியாக இல்லையென்றாலும், எத்தனை நாட்களுக்குள்ளாக வேலூருக்கு தினம் தினம் பஸ் விட அரசாங்கம் முன்வரும் ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்போது அரசு வகுத் துள்ள புதிய கொள்கையின்படி 75 மைல்களும் அதற்கு மேலும் உள்ள பஸ் வழித்தடங்களை எடுத்துக்கொள்வது என்ற முறையில் விரைவிலே வேலூர் பஸ் வழித்தடம் ஒன்று கிடைக்கக்கூடும். அதுவரையில் இப்போது உள்ள நிலைதான் நீடிப்பதாக இருக்கும்.

திரு. கே. விநாயகம் : ஸார், இப்போது வாரத்திற்கு மூன்று முறை வேலூருக்கு இங்கிருந்து நம் பஸ் போகிறது. அதிலே எவ்வளவு தொகை வசூல் ஆகிறது ஒரு நாளைக்கு ? அதிகமான தொகை வசூல் ஆகும் காரணமாக, பொது மக்களெல்லாம் அதை நாடுகிறார்கள் என்று தெரிந்த பிறகு தினந்தோறும் விடுவதில் என்ன கஷ்டம் இருக்கிறது ? போதிய பஸ்கள் இல்லையா ? இருந்தால் ஏன் விடக் கூடாது ?